பா.ஜ.க. தர மறுத்த மெட்ரோ திட்டம் குறித்து கள்ள மௌனம் ஏன்?

ரீல்ஸ் போட கூட எதுவும் இல்லாத பட்ஜெட்!

சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு விமர்சனம்!

நெல்லை, ஆக. 7- சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

முன்னாள் முதல்வர் முகஸ்டாலின் ஆட்சியில் முழுமையடைந்த போரூர் -வடபழனி மெட்ரோ ரயில் சேவை மற்றும் அவரது முயற்சியால் விரைவில் வர இருக்கின்ற மெட்ரோ திட்டங்களான சென்னை விமான நிலையம் கிளாம்பாக்கம், கோயம்பேடு - பட்டாபிராம், பூந்தமல்லி - சுங்குவார்சத்திரம் மெட்ரோ ரயில் திட்டங்களை, தனது சாதனையாக #ஸ்டிக்கர் ஒட்டும் நீங்கள் பா.ஜ.க. தர மறுத்த மதுரை, கோயம்புத்தூர் மெட்ரோ திட்டம் குறித்து பேசாமல் கள்ள மௌனம் சாதிப்பது மக்களுக்கு செய்யும் துரோகம் இல்லையா CM sir ?

தேர்தலுக்கு முன் ஆட்சி அமைந்த மறு நிமிடமே மாநிலம் முழுவதும் பெண்கள் இலவச பயணம், குடும்பத்திற்கு ஆண்டுக்கு ஆறு சிலிண்டர், பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 4000 உதவித் தொகை, மீனவர்களுக்கு டீசல் மானியம், அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டம், மகளிர்க்கு மாதம் ரூபாய் 2500 உரிமைத் தொகை என அனைத்து தரப்பு மக்களையும் நம்ப வைத்து வாக்குகளை பெற்று அரியணை ஏறிய CM Sir! ரீல்ஸ் போட கூட எதுவும் இல்லாத பட்ஜெட் உரையாக வாசித்து ஏமாற்றி விட்டீர்களே!

ஜனநாயகன் "படத்தோடு நடிப்பை விட்டுவிடுகிறேன் என்று சொன்ன நீங்கள் அடுத்த படமாக "தமிழக முதலமைச்சர்'' என்ற படத்தில் நடிக்க தொடங்கி வீட்டீர்களே CM sir ?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஆறுமுகநேரி, வீரபாண்டியன்பட்டினம் ரயில்வே மேம்பாலம் அமைத்திடுவீர்!

ஒன்றிய அமைச்சருக்கு - அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கோரிக்கை

திருச்செந்தூர், ஆக.7- ஒன்றிய சாலைப் போக்குவரத்து - நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கு தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள கோரிக்கை வருமாறு:

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய தினமும் பல்வேறு இடங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் தூத்துக்குடி திருச்செந்தூர் தேசிய நெடுஞ்சாலை எண் 32 வழியாகப் பேருந்துகள், கார்கள், வேன்கள் மற்றும் இருசக்கர வாகனங்களிலும், திருவிழாக் காலங்களில் நடைபயணமாகவும் வருகின்றனர். இச்சாலையில் ஆறுமுகநேரி பேரூராட்சி அமைந்துள்ளது{ அப்பேரூராட்சியின் வடக்குப் பகுதியில் ஒரு ரயில்வே கேட் உள்ளது. ரயில்கள் செல்வதற்காக நாளொன்றுக்கு 14 முறை இந்த கேட் மூடப்படுவதால், சாலையின் இருபுறமும் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

பள்ளி கல்லூரி மாணவர்கள், மருத்துவமனைகளுக்குச் செல்லும் நோயுற்றோர், அருகிலுள்ள கெமிக்கல் தொழிற்சாலை ஊழியர்கள், உப்பளப் பணியாளர்கள், வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் கோயிலுக்கு வரும் பக்தர்கள் எனப் பொதுமக்கள் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர்{ இதனால் நேர விரயமும் மன உளைச்சலும் நெருக்கடியும் ஏற்படுகிறது. இதேபோன்ற நிலை அருகிலுள்ள வீரபாண்டியன்பட்டினம் ரயில்வே கேட் பகுதியிலும் நிலவுவதால், அங்கேயும் உள்ளூர் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, பொது நலன் கருதி, ஆறுமுகநேரி மற்றும் வீரபாண்டியன்பட்டினம் ஆகிய இரு இடங்களிலும் ரயில்வே மேம்பாலங்களை அமைக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

எனவே, பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (Nர்யுஜ) மூலம் ஆறுமுகநேரி மற்றும் வீரபாண்டியன்பட்டினம் ஆகிய இரு இடங்களிலும் ரயில்வே மேம்பாலங்களை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்

தேனி வடக்கு மாவட்டத்தில் நகரங்கள், கிராமங்கள்தோறும் புகழஞ்சலி!

மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிவிப்பு!

தேனி, ஆக.7- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்ட் 7 அன்று தேனி வடக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. என்று தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளரும், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் அறிக்கையில் அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை பின்வருமாறு.

எழுத்துத் திறன், அரசியல் ஆளுமை, மற்றும் சமத்துவச் சிந்தனையால் உலகத் தமிழர்களின் நெஞ்சங்களில் நீங்காத பேரரசனாக இடம் பிடித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். நாவில் செந்தமிழின் இனிமையையும், கம்பீரத்தையும், மென்மையையும், மேன்மையையும் ஒரே நேரத்தில் களிநடம் புரிய வைத்த மாபெரும் கன்னித் தமிழ் படைப்பாளி!

தன் பேனா முனையால் சமூகப் புரட்சியை ஏற்படுத்தி, மேடைப் பேச்சால் லட்சக்கணக்கான தொண்டர்களைக் கட்டிப்போட்ட காந்தக் குரலுக்குச் சொந்தக்கா ரர்.அரசியல் களத்தில் அவர் வெறும் தலைவராக மட்டுமன்றி, இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிக்கும் ஆற்றல்மிக்க முன்மாதிரி ஆளுமையாக விளங்கினார்.

அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும், பல்வேறு தேசியக் கட்சித் தலைவர்களுக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற கொள்கை வழி நின்று, தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் அவர் தீட்டி நிறைவேற்றிய தொலைநோக்குத் திட்டங்களான உழவர் சந்தை, இலவச மின்சாரம், மகளிர் சுய உதவிக் குழுக்கள், சமத்துவ புரங்கள் மற்றும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனைகள் இன்னும் நூறாண்டுகள் கடந்தும் அவரது புகழை இந்நாட்டில் பறைசாற்றிக் கொண்டே இருக்கும்.முத்தமிழின் முகவரியாக, நவீன தமிழகத்தின் சிற்பியாக ஒளி வீசும் நம் இதய தெய்வம் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 07.08.2026 (வெள்ளிக்கிழமை) இன்று தேனி வடக்கு மாவட்டத்தில் ஒன்றியம், நகரம், பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தென்காசி தெற்கு மாவட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவுநாள்!

மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் அறிக்கை!

தென்காசி, ஆக.7- தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி,கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழிகாட்டுதலின்படி,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (07.08.2026-வெள்ளிக்கிழமை) தென்காசி தெற்கு மாவட்டம் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெறுகிறது.

இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும்.

மேலும் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர,பேரூர் கழகங்கள் சார்பில் கழக நிர்வாகிகள் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும்.ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

சிவகாசி மாநகரத்தில் கலைஞரின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி!

மாநகரச் செயலாளர் எஸ்.ஏ. உதயசூரியன் தலைமை!

சிவகாசி, ஆக.7- முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தங்கம் தென்னரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க சிவகாசி மாநகர தி.மு.க. மற்றும் சிவகாசி தெற்கு, கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஆகஸ்ட் 7 வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் சிவகாசி மாநகர் திமுக செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் தலைமையில் பேரறிஞர் அண்ணா சிலையில் இருந்து சிவன் கோவில் வரையிலும் அமைதி பேரணி சென்று மௌன அஞ்சலியை செலுத்தி ஐம்பெரும் உறுதி மொழி எடுத்து அன்னதான நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வுக்கு, சிவகாசி மாநகராட்சி மேயர், துணைமேயர், மண்டல குழுத் தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, சிவகாசி தெற்கு, கிழக்கு ஒன்றிய பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பா ளர்கள், துணை அமைப்பா ளர்கள், உள்ளாட்சிப் பிரதி நிதிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாநகர் தி.மு.க. செயலாளர் எஸ்.ஏ. உதயசூரியன் கேட்டுக் கொண்டார்.

சிவகங்கை மாவட்டத்தில்

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8வது நினைவு தினம்!

முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, ஆக.7- இன்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் எட்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அமைதிப் பேரணியாக சென்று கலைஞருக்கு நினைவஞ்சலி செலுத்துமாறு முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது . தமிழ் இனத்திற்காகவும் , தமிழ் மொழிக்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் தனது இறுதி மூச்சு வரை பாடுபட்டவர் நமது தலைவர் கலைஞர் ஆவார். தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதல்வராக இருந்த பொழுது தமிழகத்தில் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டின் அரசியலை நிர்ணயித்தவர். இந்திய நாட்டின் அரசியல் தலைவர்களில் முன்னோடி யான் மூத்த தலைவராக திகழ்ந்தார். அவருக்கு நிகராக அரசியலில் வேறு எந்த தலைவரும் இதுவரைஇல்லை. அவரது வழியில் நமது கழகத் தலைவர் முன்னாள் முதல்வர் தளபதி அவர்கள் கடந்த 5ஆண்டு காலம் திராவிட மாடல் பொற்கால ஆட்சியினை நடத்திவந்தார். நம் தலைவர் கலைஞர்அவர்கள் நம்மை விட்டு பிரிந்து 8 ஆண்டுகள் ஆகிறது.அவர் மறைந்தாலும் அவருடைய நினைவுகள் என்றும் மறையவில்லை. அவருடைய எட்டாவது ஆண்டுகளினால் அனுசரிக்கப்படுகிறது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் நிர்வாகிகள் தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கி வந்தார். தமிழகத்தில் இருந்து இந்திய நாட்டின் அரசியலை நிர்ணயித்தவர். இந்திய நாட்டின் அரசியல் தலைவர்களில் முன்னோடி யான் மூத்த தலைவராக திகழ்ந்தார். அவருக்கு நிகராக அரசியலில் வேறு எந்த தலைவரும் இதுவரைஇல்லை. அவரது வழியில் நமது கழகத் தலைவர் முன்னாள் முதல்வர் தளபதி அவர்கள் கடந்த 5ஆண்டு காலம் திராவிட மாடல் பொற்கால ஆட்சியினை நடத்திவந்தார். நம் தலைவர் கலைஞர்அவர்கள் நம்மை விட்டு பிரிந்து 8 ஆண்டுகள் ஆகிறது.அவர் மறைந்தாலும் அவருடைய நினைவுகள் என்றும் மறையவில்லை. அவருடைய எட்டாவது ஆண்டுகளினால் அனுசரிக்கப்படுகிறது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் நிர்வாகிகள் தலைவர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்து மாறு கேட்டுக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் ஆட்சி மற்றும் திராவிட மாடல் ஆட்சி நாயகன் நம் முடைய கழகத் தலைவர் தளபதி ஆட்சி யின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக்கூற வேண்டும். நாம் அனைவரும் இன்று தலைவர் கலைஞரின் நினைவு தினத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன் .. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகி கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவு தின பேரணி!

மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக.7- தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி. கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் எட்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவு தின அமைதி பேரணி இன்று (07.08.2026- வெள்ளிக்கிழமை) அன்று காலை 07:30 மணி அளவில் வி.வி.டி. மெயின் ரோடு - டூவிபுரம் 5வது தெரு மற்றும் அண்ணா நகர் 7வது தெரு சந்திப்பில் இருந்து எனது தலைமையில் அமைதி ஊர்வலம் துவங்கி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள கலைஞர் அவர்களின் சிலைக்கு முன்பு வந்து நிறைவு பெறுகிறது அங்கு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது.

அதேபோல தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டியில் அமைதிப் பேரணி நடைபெற்று கலைஞரின் திருவுருவச் சிலைக்கு புகழஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

அதேபோல் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றியங்களிலும் பேரூர்களிலும் நகரம், பகுதிகளிலும், கிளைக் கழகங்களிலும்,வட்டக் கழகங்களிலும் கலைஞர் அவர்களின் திருவுருவப்படம் வைத்து மாலையிட்டு புகழ் அஞ்சலி செலுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக சுமார் 50 ஆண்டு காலம், தமிழகத்தின் முதலமைச்சராக 19 ஆண்டு காலம், போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்று சுமார் 60 ஆண்டு காலம் சட்டப்பேரவை உறுப்பினராக பதவி வகித்தவர். பெண்களின் முன்னேற்றத்திற்காக தன் காலமெல்லாம் பாடுபட்டவர். தமிழகத்தை இந்திய மாநிலங்கள் அனைத்தையும் விட ஓரடி முன்னால் வளர்ச்சியை நோக்கி அழைத்து சென்ற பெருமைக்குரியவர். கணினி கல்வியை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்திற்கு அறிமுகம் செய்தவர். தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி மாநிலம் ஆக்கியவர். பெண்களுக்கு சொத்துரிமை வழங்கியவர். தமிழ்நாட்டின் கட்டிடக்கலைக்கு சான்றாக பல்வேறு மேம்பாலங்களையும் அரசு அலுவலகங்களையும் நூலகங்களையும் கட்டி எழுப்பியவர். மாபெரும் தலைவர்களுக்கு அழகிய நினைவு சின்னங்களை எழுப்பியவர் என பல்வேறு பெருமைகளுக்கு சொந்தக்காரரான நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை என்றென்றும் நன்றியோடு நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவோம்.

புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தை சேர்ந்த மாவட்ட மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் வட்டம் கிளை கிளைக் கழகங்களை சார்ந்த நிர்வாகிகள் மாநில அணி நிர்வாகிகள் மாவட்ட மற்றும் பல்வேறு பொறுப்பில் இருக்கக் கூடிய அணி நிர்வாகிகள் முன்னாள் மற்றும் இன்னாள் நிர்வாகிகள் கழக செயல்வீரர்கள் மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி பகுதியை சார்ந்த

6 மீனவர்கள் விரைவில் தாயகம் திரும்பிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

மாவட்ட செயலாளர் ரெ.மகேஷ் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாபிடம் கோரிக்கை முன்வைத்தார்!

கன்னியாகுமரி, ஆக.7- கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி பகுதியை சார்ந்த 6 மீனவர்கள் கடந்த மே மாதம் இராமேஸ்வரம் மண்டபம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து நாட்டு படகில் மீன் பிடிக்க சென்ற போது படகு பழுது காரணமாக திசை மாறி சென்றதால் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்களாக இலங்கை சிறையில் உள்ளனர். அவர்களை மீட்ப தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அவர்கள் விரைவில் தாயகம் திரும்பிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அவர்களின் குடும்பத்தினருடன் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் 05.08.2026 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அவர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்து கோரிக்கையை முன்வைத்தார். மேலும் மணக்குடி ஊராட்சிக்குட்பட்ட மணக்குடி பொழிமுகம் கால்வாயில் R.A.S. வாட்டர் ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனம் முறையான அனுமதி பெறாமல் பாதுகாப்பற்ற முறையில் சுற்றுலா படகு சவாரி நடத்தி வருகின்றனர். இந்த பாதுகாப்பற்ற படகு பயணங்களால் விபத்து ஏதும் ஏற்பட்டால் உயிர் சேதம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் மணக்குடி ஊராட்சி பொதுமக்களின் கோரிக்கையின் படி அதனை மூட நடவடிக்கை எடுக்கவும், கீழமணக்குடி பகுதி மக்களின் குடிநீர் தேவைக்காக இலந்தையடி விளை பகுதியில் இருந்து குடிநீர் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனை மேலமணக்குடி பகுதி மக்களும் பயன் பெறும் வகையில் நீட்டிப்பு செய்திடவும் மற்றும் கீழமணக்குடி பேருந்து நிறுத்தம் முதல் அந்தோனியார் குருசடி தெற்கு கடற்கரை சாலை வரை சுமார் 400 மீட்டர் சாலை வசதி மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் 100 மீட்டர் மட்டுமே தார் சாலை போடப்பட்டுள்ளது. மீதம் உள்ள 300 மீட்டர் தூரத்திற்கும் உள்ள பகுதிகளில் உடனே தார்ச் சாலை அமைத்து தரவும் உள்ளிட்ட கோரிக்கைகளையும் முன்வைத்தார்.

நிகழ்வில் இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜெ.மிலன், தி.மு.க. ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி சுபிதா ஆகியோர் உடன் இருந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம், ஆக.7- கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர், இளந்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவுநாள் (07.08.2026-வெள்ளிக்கிழமை) இராமநாதபுரம் மாவட்ட கழகம் சார்பில் அனைத்து கிளை, வார்டு கழகங்கள் தோறும் "புகழஞ்சலி" செலுத்தும் நிகழ்வு நடைபெற உள்ளது. ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள். அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், அனைவரும் அவரவர் எல்லைக்குட்பட்ட கிளை, வார்டு கழகங்கள் தோறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி புகழஞ்சலி செலுத்திடுமாறு கேட்டு கொள்கிறேன்.